**செ. கு. எண்:206** **நாள் : 27.12.2015**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 27.12.2015

திருநெல்வேலி மாவட்டம், ஏர்வாடியிலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சூட்டுமலை ரெட்டை பொத்தை அடிவாரம் அருகில் ஆட்டோ ஓட்டுநர் திரு. ஷேக் முகம்மது காஜா முகைதீன் என்பவர் 21.12.2015 அன்று இறந்து கிடந்தது கண்டறியப்பட்டது. இது தொடர்பாக காவல் துறையினர் வழக்கு பதிவு செய்து புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

திரு. ஷேக் முகம்மது காஜா முகைதீன் தந்தை திரு. சாகுல்ஹமிது அவர்கள், தனது மகன் வருமானத்தில் தான் குடும்பத்தை நடத்தி வந்ததாகவும், தற்போது தனது மகனின் இறப்பால் குடும்பம் வறுமையில் வாடுவதாகவும், அவரது குடும்பச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு உதவிட வேண்டி கோரிக்கை விடுத்துள்ளார்.

அவரது கோரிக்கையை கனிவுடன் பரிசீலித்து உயிரிழந்த திரு. ஷேக் முகம்மது காஜா முகைதீன் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

மேலும், திரு. ஷேக் முகம்மது காஜா முகைதீனை கொலை செய்தவர்களை விரைந்து கைது செய்து அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படி நான் காவல் துறையினருக்கு ஆணையிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**